ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2131/24 - 2019 ජූලි මස 09 වැනි අඟහරුවාදා - 2019.07.09
2131/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பு

அதியுத்தமராம் சனாதிபதியின் பணிப்பின் வண்ணம், 1979 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதிய 48/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டதுமான செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பை 2019.07.04 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு மேலும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்துவதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் பணித்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2019, யூலை 04.

1 A - G 30486 - 417 (2019/07)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*அதில் 9 ஆம் பந்தியை அடுத்து கீழ்க்காட்டப்படும் புதிய பந்தியை உள்ளடக்குவதுடன், அது சொல்லப்பட்ட குறிப்பின் 9அ பந்தியாக வலுவிலிருத்தல் வேண்டும்.*

*9அ ஆயினும், இந்தப் பிரமாணக் குறிப்பின் 1அ பந்தியின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள அ. அட்டவணையின் 03 இன் கீழ் மீள் சேவையில் அமர்த்தப்பட்ட செயலாளரொருவருடைய சேவை முடிவுறும் பட்சத்தில், அவ்வாறு சேவை முடிவடைதலானது ஒழுக்காற்று விடயம் அல்லாத காரணத்தின்கீழ் அமையுமாயின், சேவை முடிவுறும் சந்தர்ப்பத்தில் பெற்ற சம்பளத்தின்படி* ஓய்வுச் சம்பளத்தை மீளமைத்தல் வேண்டும்.*

* இதன்போது சேவை முடிவுறும் சந்தர்ப்பத்தில் பெறப்பட்ட சம்பளமாக எடுத்துக் கொள்ளப்படுவது, அப்போது உத்தியோகத்தரினால் உழைத்துப் பெறப்பட்ட சம்பள ஏற்றங்கள், அரசினால் இடையிடையே மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்புகள், ஓய்வுச் சம்பளத்துடன் கூடிய படிகள் மற்றும் ஓய்வுச் சம்பளத்திற்காக கணக்கெடுக்கப்படும் வேறு யாதேனும் கொடுப்பனவுகள் உள்ளடங்கிய சம்பளமாகும்.

*7 - 818*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.